1992 மார்ச் 16]

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ). சத்துணவுக் கூடங்களில் பணியாற்றும் ஊழியர்களைப் பற்றிய புகார்களை விசாரணை செய்து அதன்படி நடவடிக்கை எடுக்க அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே இம்மாதிரியான புகார்கள் குறித்து நடவடிக்கை எடுத்து விடுவதால் அரசு அளவில் சத்துணவு ஊழியர்களைப் பற்றிய புகார்கள் எதுவும் தற்சமயம் நிலுவையில் இல்லை.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி [*] இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) உரிமைப் பிரச்சினை எழுப்பும் நடைமுறை குறித்து,

திரு. இளம்வழுதி: தலைவரவர்களே,.......

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், நான் சொல்கிறேன், நீங்கள் எதை எழுப்பப் போகிறீர்கள்?

திரு. எஸ், திருநாவுக்கரசு: பிரிவிலேஜ் சம்பந்தமாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவிலேஜ் இஷ்யூவைப் பற்றி என்னிடத்திலே எழுதிக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது,

திரு. எஸ். திருநாவுக்கரசு: 226-ஐப் படியுங்கள், ஆளுங் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. ஒருவர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைக் கேளுங்கள், 226-வது விதியைப் படியுங்கள். அதாவது, விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற பொழுது அது சம்பந்தமாக ஏதேனும் எழுப்புவதற்குத்தான் 226 (குறுக்கீடு). இதைக் கேளுங்கள், விதி என்ன என்பதைப் பாருங்கள். 'Notwithstanding anything contained in these rules, the Speaker mays *Suo-motu* refer any question of Privilege to the Committee of Privileges for examination, investigation and report.'

என்றுதான் இருக்கிறது, 'suo-mctu' அனுப்பலாம் என்று இருக்கிறது. (குறுக்கீடு) இது ஸ்பீக்கருக்கு இருக்கிற அதிகாரம், இதில் உறுப்பினருக்கு என்ன இருக்கிறது?

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் சொல்வது,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள், இது சம்பந்தமாகச் சில உறுப்பினர்கள் என்னிடத்திலே எழுத்து மூலமாகச் சில விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள், அதுபற்றி நான் பதில் சொல்ல எழுந்திருக்கிறேன். நீங்கள் கொடுக்காத உறுப்பினர். இந்த விதியை சொல்லிக் கொண்டிருந்தால் என்ன செய்வது?

திரு, எஸ், திருநாவுக்கரசு: ரூலிங் பார்ட்டி மெம்பர்,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ரெஃபர் பண்ணலாம் என்பது எனக்கு இருக்கிற உரிமை, அதை நீங்கள் சொல்ல வேண்டியது இல்லை, நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு), நீங்கள் உட்காரலாம். மற்ற உறுப்பினர்களுக்கு அது பற்றிக் கொடுத்த உறுப்பினர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: என்ன ஆயிற்று என்று,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்த உறுப்பினர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும், கொடுக்காமல் நின்று கொண்டு இருப்பது என்றால்—எந்த விதியிலே இப்பொழுது நிற்கிறீர்கள், சொல்லுங்கள், எல்லாம் தெரிந்ததுபோல் ஒவ்வொரு தடவையும் நீங்கள் எழுந்து கொண்டு இருக்கிறீர்கள், நீங்கள் எந்த விதியிலே இப்பொழுது நிற்கிறீர்கள்? விதி 226 இல் "The Speaker may *suo-motu* refer any matter involving breach of privilege" என்று இருக்கிறது, இது ஸ்பீக்கர் செய்யவேண்டிய விஷயம், இதிலே நீங்கள் எழுந்து கொண்டிருந்தால் என்ன செய்வது? இதில் ஏதேனும் நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள்?

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஸீரோ ஹவரிலே ......

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zoro Hour என்று ஏதாவது விதி இருக்கிறதா? (குறுக்கீடு) பார்லிமெண்டிலும் விதி இல்லை; இங்கும் விதி இல்லை, (குறுக்கீடு) ஏதாவது விதி இருந்தால் சொல்லுங்கள், நீங்கள் இங்கு எல்லாம் தெரிந்ததைப் போல பேசிக் கொண்டே இருக்கக் கூடாது.

1992 மார்ச் 16] [பேரவைத் தலைவர்]

zero hour என்று எந்த விதி இருக்கிறது, இந்த விதி226-இல் speaker may suo moto refer என்றுதான் இருக்கிறது. அது, speaker-க்கு இருக்கிற அதிகாரம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. zero hour என்பது ஒரு convention தானே தவிர, அது விதி இல்லை, "Parliamentary Rules of Procedure and also Rules of Procedure in the Legislative Assembly" இவற்றைப் படித்துப் பார்த்தோமேயானால் "Zero Hour" என்பதற்கு எந்தவிதமான விதிமுறையும் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி,)

திரு, எஸ், திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே. ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், என்னிடத்திலே கொடுத்த உறுப்பினருக்கு நான் பதில் சொல்ல வேண்டும், (குறுக்கீடு), என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்த உறுப்பினருக்கு நான் விளக்கம் சொல்ல வேண்டும், (குறுக்கீடு) அதை நீங்கள் கேட்கவில்லை; உட்காருங்கள்,

(ஆ) உறுப்பினர் திரு, பி, சொக்கலிங்கம். உறுப்பினர்கள் விடுதியிலிருந்து சிலரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதாக வந்த செய்தி குறித்து பேரவைத் தலைவரின் குறிப்புரை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு,பி. சொக்கலிங்கம். பேரவை விடுதியிலேயிருந்து கடத்திச் செல்லப்பட்டு. தாக்கப்பட்டதாக வந்த செய்தி குறித்து. திரு, பரிதி இளம்வழுதி விதி 56-ன் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் ஸ்பெஷல் மென்ஷனாக இதை அவையில் எழுப்ப வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தையும் கேட்டு, என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள், பொது விவாதத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுப்பதில்லை என்பது நியதி. அதனால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியை மறுத்திருக்கிறேன். இருந்தாலும். இது உறுப்பினரைப் பற்றிய பிரச்சினை, அதுவும் சட்டமன்ற விடுதியில் நடந்ததாகத் தெரிவித்திருக்கிற காரணத்தினால், சட்டமன்ற விடுதி என்பது வேறு எந்தத் துறையின் கீழ் வராமல். பேரவைத் தலைவருடைய நேரடி நிர்வாகத்திலே வருகிற ஒரு இடமாகும், எனவே. நான் இதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு, சொக்கலிங்கம் அவர்கள் தாக்கப்பட்டதாக காவல்துறைக்கு செய்தி கிடைத்து காவல் துறை அதுபற்றி தீவிரப் புலன் விசாரணை செய்து கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள், மேலும். சட்டமன்ற விடுதிக்குள் உறுப்பினர்கள் பெரிதும் பாதுகாப்பாக இருக்கத்தக்க பல்வேறு நடைமுறைகளை நாம் வகுத்துக்